பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

19 11 2024 **TUESDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பருவநிலை மாற்றத்தை எதிர்த்து போராடுவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் அடங்கிய ஜி.20 உச்சிமாநாட்டு பிரகடனம் வெளியிடப்பட்டது.
- இந்தியா – சீனா எல்லைப்பகுதி விவகாரத்தில் முன்னேற்றம் காணும் விதமாக சீன வெளியுறவு அமைச்சர் திரு. **Wang Yi**–யுடனான பேச்சுவார்த்தை அமைந்திருந்ததாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- தேசிய ஒருமைப்பாட்டு தின உறுதிமொழி இன்று நாடுமுழுவதும் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- செங்கல்பட்டு மாவட்டம், வடநெம்மேலியில் உள்ள கடல்நீரை குடிநீராக்கும் திட்டப் பணிகள் தொடர்பாக திரு. அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16வது நிதிக்குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.
- சிலியில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் இந்தியாவின் **Prarthana Thombare –** அமெரிக்காவின் **Robin Anderson** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>><<<<<**

பருவநிலை மாற்றத்தை எதிர்த்து போராடுவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் அடங்கிய ஜி.20 உச்சிமாநாட்டு பிரகடனம் நேற்று வெளியிடப்பட்டது.

யுக்ரைன் மற்றும் மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்டுவது, ஜி.20 உறுப்பு நாடுகளில் வலுவான மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பது உள்ளிட்ட அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

வளரும் நாடுகளின் இருப்பை ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் ஏற்படுத்தும் விதமாக அதனை விரிவாக்கம் செய்யும் தீர்மானமும் அதில் இடம்பெற்றுள்ளது.

காஸா பகுதி மற்றும் லெபனானில் தற்போது நிலவி வரும் போர்ச்சூழல் குறித்தும், அங்கு மனிதாபிமான அடிப்படையிலான உதவிகளை உடனடியாக வழங்குவது குறித்தும் அந்த பிரகடனத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

2050ஆம் ஆண்டுக்குள் கார்பன் உமிழ்வை முற்றிலுமாக நிறுத்துவது தொடர்பான சுற்றுச்சூழல் சீர்திருத்தங்களும் ஜி.20 உச்சிமாநாட்டு பிரகடனத்தில் இடம்பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இன்று நடைபெறும் ஜி.20 உச்சிமாநாட்டின் இரண்டாம் நாள் கூட்டத்தில், எரிசக்தி பரிமாற்றம், நிலையான வளர்ச்சி, டிஜிட்டல் உட்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**>>>>><<<<<**

பிரேஸிலின் ரியோடிஜெனிரோவில் நடைபெறும் ஜி-20 உச்சி மாநாட்டுக்கு இடையே, ஐரோப்பிய ஆணையத் தலைவர் திருமதி. **Ursula Von Der Leyen** –னுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி பேச்சு நடத்தினார்.

அப்போது ஐரோப்பிய ஆணையத்துடன் இந்தியா நல்லுறவை கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்தோனேஷிய அதிபர் திரு. **Prabowo Subiando-**வுடன் பேச்சுவாரத்தை மேற்கொண்ட பிரதமர் அந்நாட்டுடன் இந்தியா 75 ஆண்டுகாலமாக நட்புறவை கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், வர்த்தகம், சுகாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவு மேம்பாடு கண்டிருப்பதாக அவர் கூறினார்.

இந்த மாநாட்டிற்கிடையே, தென்கொரிய அதிபர் திரு. **Yoon Suk Yeol,** எகிப்து அதிபர் திரு. **Abdel Fattah El Sisi** உள்ளிட்ட தலைவர்களுடனும் திரு. நரேந்திர மோடி இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

**>>>>><<<<<**

பிரேஸிலில் நடைபெற்று வரும் ஜி.20 உச்சிமாநாட்டுக்கு இடையே வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், சீன வெளியுறவு அமைச்சர் திரு. **Wang Yi**–யுடன் பேச்சு நடத்தினார்.

இந்தியா – சீனா எல்லைப்பகுதி விவகாரத்தில் முன்னேற்றம் காணும் விதமாக இந்த பேச்சுவார்த்தை அமைந்ததாக திரு. ஜெய்சங்கர் தமது சமூகவலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

தற்போதைய உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும், சீனா - இந்தியா இருதரப்பு உறவை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் விதமாகவும் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றதாக திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

**>>>>><<<<<**

சுதந்திரப் போராட்ட வீராங்கனை ஜான்சிராணி லட்சுமிபாயின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக போராடியது மட்டுமல்லாமல், உலக அரங்கில் இந்தியப் பெண்களின் சக்திக்கான உதாரணமாகவும் அவர் விளங்குவதாக தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், வீரம் மற்றும் தேசபக்தியின் அடையாளமாக ஜான்சிராணி திகழ்வதாக கூறியுள்ளார்.

**>>>>><<<<<**

நாடுமுழுவதிலும் தனியார் பங்கேற்புடன் கூடிய நவீன கழிப்பிடங்களை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு உடன்பாட்டில், மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகமும், இந்துஸ்தான் யுனிலிவர் நிறுவனமும் கையெழுத்திட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் நவீன கழிப்பிடங்களை ஏற்படுத்துவதற்கு சர்வதேச சுலப் நிறுவனத்துடனும், மற்றொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு த்துறை இணையமைச்சர் திரு. **Tokham Sahu** தூய்மை வளாக இயக்கத்தை புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்தார்.

**>>>>><<<<<**

மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்த தினத்தை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு தமது சமூகவலைதளப் பக்கத்தில் மரியாதை செலுத்தியுள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், துணிச்சல் மற்றும் அன்புக்கான உதாரணமாக அவர் திகழ்ந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளையொட்டி, தேசிய ஒருமைப்பாட்டு தின உறுதிமொழி நாடுமுழுவதும் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் பணிபுரிவோருக்கு துணை தலைமை இயக்குநர் திருமதி. வாசுகி உறுதிமொழியை செய்து வைத்தார்.

>>>>><<<<<

செங்கல்பட்டு மாவட்டம், வடநெம்மேலியில் உள்ள கடல்நீரை குடிநீராக்கும் திட்டப் பணிகள் தொடர்பாக திரு. அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16வது நிதிக்குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

குடிநீர் ஆலையின் செயல்பாடு, உற்பத்தி, வருவாய் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து, அக்குழுவினர் அங்கிருந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.

நான்கு நாள் பயணமாக, தமிழகம் வந்துள்ள 16வது நிதிக்குழு அடுத்த ஆண்டு அக்டோபர் 31ஆம் தேதிக்குள் மத்திய அரசிடம் தமது பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

தமிழகத்தில் நிறைவேற்றப்படும் 98 சதவீத திட்டங்கள் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டவை என்று பிஜேபி மாநில துணைத் தலைவர் திரு. கே.பி. ராமலிங்கம் கூறியுள்ளார்.

தருமபுரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் மத்திய அரசு அதிக அக்கறை செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை, நான்குவழிச் சாலை தொடர்பான நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க இன்று நடைபெறும் கூட்டத்தில் முடிவு எட்டப்படும் என்று தமிழக

காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற பொது கணக்குக்குழுத் தலைவருமான திரு. செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

தேங்காய்பபட்டினம் துறைமுகத்தில் ஆய்வு மேற்கொண்ட அவர், செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்தார்.

>>>>><<<<<

தேசிய மாணவர் படை தினம் வரும் 24ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவ மாணவியர் அப்பகுதியில் தூய்மைப் பணியில் ஈடுபட்டனர்.

இதில் 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கண்ணன் 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரின் எல்லைப்பகுதியில் உள்ள பூஞ்ச் மாவட்டத்தில் பாதுகாப்பு நிலைமை குறித்து ஜம்மு மண்டல காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் திரு. **Anand Jain** நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

பாதுகாப்புப் படையினரின் உளவுப் பிரிவை வலுப்படுத்துவது குறித்து அவர் அதிகாரிகளோடு ஆலோசனை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரின் **Reasi** மாவட்டத்தில் உள்ள வைஷ்ணவ தேவி ஆலயத்தில் இந்த ஆண்டில், இதுவரை 86 லட்சத்திற்கும் மேற்பட்ட யாத்ரிகர்கள் வருகை தந்துள்ளனர்.

அடுத்த மாத இறுதிக்குள் இந்த எண்ணிக்கை 95 லட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மேலும், வைஷ்ணவ தேவி ஆலயம் தொடர்பாக கத்ராவில் செயல்பட்டு வரும் சேவை மையம் நாள்தோறும் 2 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட யாத்ரிகர்களின் அழைப்புகளுக்கு பதிலளித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

சிலியில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் இந்தியாவின் **Prarthana Thombare –** அமெரிக்காவின் **Robin Anderson** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**Colina-**வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 6-3 என்ற செட்கணக்கில் சிலியின் **Fernanda -** பிரேஸிலின் **Rebeca** இணையை வென்றது.

>>>>><<<<<

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

**Shenzhen** நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியாவின் சுமித் ரெட்டி – சிக்கி ரெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 23-21, 17-21, 21-17 என்ற செட்ணக்கில் அமெரிக்காவின் **Presley Smith – Jennie Gai** இணையை வென்றது.

>>>>><<<<<

ஆசிய மகளிர் சாம்பியன் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில், இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

பீகாரின் ராஜ்கீரில் இப்போட்டி மாலை மணி 4.45-க்கு தொடங்குகிறது.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில், சீனா — மலேசியாவை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் தமிழக அணி 8-0 என்ற கோல்கணக்கில் ஆந்திர அணியை வென்றது.

>>>>><<<<<

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில், புனே — உத்தரப்பிரதேச அணியையும், பெங்களூரு — பாட்னா அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>><<<<<